**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்**

**முன்னிலை:– செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ம் நாள் திங்கட்கிழமை

**பட்டியல் வழக்கு எண். 159/2025**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
ஊதியூர் காவல் நிலையம்,
குற்ற எண். 04/2020

... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

A1. மாரியப்பன்
த/பெ. மயில்கண்ணு
A2. மணிகண்டன்
த/பெ. நாடுகன்னியன் ... எதிரிகள்

இவ்வழக்கானது கடந்த 21.05.2025 அன்று C.C. No: 159/2025 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் எதிரிகள் தரப்பில் குற்றத்தை ஒப்புக்கொண்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை II திருமதி.P.இந்துமதி ஆஜராகியும் எதிரி தரப்பில் திரு.P.வடிவேல்சாமி அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரீசிலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## <u>தீர்ப்புரை</u>

1. கடந்த 08.12.2019 ம் தேதி காலை 07.30 மணியளவில் ஊதியூர் காவல் நிலைய சரகம் எல்லைக்குட்பட்ட சங்கரண்டாம்பாளையம் கிராமம் கோட்டை மாரியம்மன் கோவில் அருகில் உள்ள அமராவதி ஆற்றில்

D
THENMOZHI
Digitally signed by
D THENMOZHI
Date: 2026.03.09
17:42:57 +0530

தாராபுரம் மண்டல துணை வருவாய் வட்டாட்சியர் திரவியம் அவர்கள் தணிக்கை செய்த போது 2 ஆம் எதிரி மணிகண்டன் என்பவர் 1 ஆம் எதிரி மாரியப்பன் என்பவர் அனுமதியோடு மாரியப்பனுக்கு சொந்தமான TN 48 H 7795 என்ற எண்ணுள்ள டிரெய்லருடன் கூடிய டிராக்டரில் உரிய அனுமதியும், ஆவணங்களும் இன்றி அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி தாங்கள் சுயலாபம் அடையவேண்டும் என்ற உள்நோக்கத்தோடு ரூ.526/- மதிப்புள்ள 39.57 Cft அளவுள்ள அமராவதி ஆற்று மணலை திருடிய குற்றத்திற்காக ஊதியூர் காவல் நிலைய உதவி காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது 379 of IPC ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி,மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீது பிரிவு 379 of IPC ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டுகளை பற்றி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே, இந்த வழக்கு அரசு தரப்பு சாட்சிகளுக்காக ஒத்திவைக்கப்பட்டது.

3. குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்டு மனுவை தாக்கல் செய்தார். ஆகையால், இந்தியாவின் உச்சநீதிமன்றத்தின் **மகாராஷ்டிரா மாநிலம் எதிராக சுக்தேவ் சிங் மற்றும் மற்றொருவர்** (1992) 3 SCC 700 என்ற வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில், குற்றவாளிகளின் ஒப்புதல் தெளிவாகவும், தகுதியற்றதாகவும் இருப்பதையும், உண்மைகளை ஒப்புக்கொள்வதால் குற்றங்கள் நிரூபிக்கப்படுவதையும் கருத்தில் கொண்டு, இந்த நீதிமன்றம்

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:43:11 +0530

அந்த ஒப்புதலை ஏற்க முனைந்துள்ளது. இந்நீதிமன்றம் குற்றவாளிகளை இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 379 இதச  ன் கீழ் குற்றவாளிகளாக அறிவிக்கிறது. குற்றவாளிகளிடம் தண்டனை குறித்து கேள்வி வினவியபோது, அவர் தான் முதல் குற்றவாளிகள் என்றும், நீதிமன்ற வாய்தாவிற்கு தவறாமல் ஆஜராகியதாகவும், தான் நன்னடத்தையுடன் நடந்துகொண்டதாகவும் கூறி தண்டனையை குறைப்பதற்குத் தாழ்மையாக கேட்டுக்கொண்டார். முடிவில், **குற்றவாளிகளுக்கு இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 379 ன் கீழ் தலா ரூ.5000/- அபராதம்** விதிக்கப்படுகிறது. அபராதம் செலுத்த தவறினால், குற்றவாளிகள் 1 வாரம் எளிய சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும். மேற்படி, குற்றவாளிகளுக்கு  மொத்தமாக ரூ.10,000/- அபராதம் விதிக்கப்படுகிறது. இத்தீர்ப்பு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

4. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்தான (பி.ஆர்.58/2022) TN 48 H 7795 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டர் சி.எம்.பி.எண்.1005/2025, நாள்.07.07.2025 ஆம் தேதியிட்ட மனு அனுமதிக்கப்பட்டு எதிரி இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். இவ்வழக்கு முடிந்துவிட்டதால் வழக்குச்சொத்தினை உரிமையாளரே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மற்றொரு வழக்கு சொத்தான (பி.ஆர்.58/2022) சுமார் 1 யூனிட் மணல் வருவாய் துறையிடம் அரசுடைமையாக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:43:23 +0530

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் 09 ஆம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:43:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

<u>குறிப்பு–</u>

1. தீர்ப்பு விபரம் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2. அபராதம் செலுத்தப்பட்டது.
3. தண்டனை முடிந்து எதிரி நீதிமன்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்.